தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 5, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2027

1996 ஆகஸ்ட் 20, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி **இளம்வழுதி** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்"

அறவழியில் உறுதியானவனாகவும், பொருள் வகையில் நாணயமானவனாகவும், இன்பம் தேடி மயங்காதவனாகவும், தன்னுயிருக்கு அஞ்சாதவனாகவும் இருப்பவனையே ஆய்ந்தறிந்து ஒரு பணிக்கு அமர்த்த வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்

1--

களவுபோன மரகதலிங்கத்தை கண்டுபிடித்தல்

வினா எண் 955--**திரு. ஜி. நிஜாமுதீன் :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் நீலாயதாட்சியம்மன் ஆலயத்திலிருந்து களவுபோன மரகதலிங்கத்தை கண்டுபிடிக்க காவல் துறை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை:

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கடந்த 28-11-1992-ஆம் தேதி பகல் 12-30 மணிக்கும் 16-40 மணிக்கும் இடையில் சந்தேகத்திற்கு இடமான இரண்டு இளம் நபர்கள் நாகப்பட்டினம் அருள்மிகு நீலாயதாட்சி அம்மன் ஆலயத்திற்குள் சாமி தரிசனம் செய்வது போல் உள்ளே நுழைந்து பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த அறையின் பூட்டிய கதவின் பூட்டை உடைத்து சுமார் ரூ. 90,000 மதிப்புள்ள கோமேதலிங்கம் மற்றும் படிகலிங்கத்தை திருடிச் சென்றுள்ளார்கள். இவ்வழக்கு நாகப்பட்டினம் காவல் நிலைய குற்ற எண் 930/92, பிரிவு 454 மற்றும் 280 இந்திய தண்டனைச் சட்டப்படி வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 8-3-95-ல் பொருளாதாரக் குற்றப்பிரிவுக்கு (சிலை பிரிவு) மாற்றப்பட்டு, தற்போது அப்பிரிவின் விசாரணையில் உள்ளது. மேலும், இவ்வழக்கின் விசாரணைக்கு உதவியாக கைரேகை நிபுணர்கள், டாக்ஸ்குவாடு இவைகளை உபயோகப்படுத்தி பார்த்ததிலும் எந்தவித உபயோகமான தகவலும் கிடைக்கவில்லை. சிலைத் திருட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்டு தலைமறைவாகி இருக்கும் இளங்குற்றவாளிகள் வந்து செல்லும் இடங்களை கண்காணிக்க காவல் துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2--

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திற்கு தமிழக அரசின் ஒதுக்கீட்டுத் தொகை

வினா எண் 32--**திரு. அ.லெ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் அபிஷேகம் பட்டியில் உள்ள மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திற்கு, இதுவரை தமிழக அரசு ஒதுக்கீடு செய்த தொகை எவ்வளவு?

(ஆ) இப்பல்கலைக் கழகத்தில் கட்டடங்கள் கட்டவும், குடியிருப்புகள் அமைக்கவும், புதிய துறைகள் துவங்கவும் நிதி வழங்கிட அரசு முன்வருமா?